Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# Life of Women in Uma Maheswari's Novel *YarumYarudanum Illai*

**Dr. R. Meena**, Assistant Professor of Tamil, Anna Adarsh College for Women, Chennai – 600040, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7094-5814
DOI: 10.5281/zenodo.14752476

## Abstract

*The changes in the behaviour of an individual would naturally affect him, his family, and the society. Literature deals with these in different forms and different meanings. From the Sangam period to the present, all literature has been actively involved in revealing the inner self of the individual. The passing away of the old and the introduction of the new are not new to Tamil literature. The Tamil people enriched their lives by listening to traditional songs and stories. Today's literary works are the result of their desire for the change of their taste. Narrative literatures stand out among these literary works. Due to the inner feelings, the stories emerge innumerable psychological thoughts such as pleasure, sorrow, disorder, and peace found in the hearts of humans are recorded in such stories. Writers have the power to read the minds of their fellow humans. Uma Maheswari is one of the notable writers in the Tamil literary space. Her novel "Yarum Yarudanum Illai" is a good example of the portrayal of women. This study aims to highlight the lives of women in the novel.*

**Keywords:** Lifestyle, Women, Uma Maheswari, *Yarum Yarudanum Illai.*

## References

[1] Ambai. *Udal Ennum Veli - Pennum Mozhiyum Velippadum*. Kizhakku Publishers, Chennai. December 2017.
[2] Uma Maheswari. *Yarum Yarudanum Illai*. Thamizhini Publisher, Chennai, 2003.
[3] Seenisami, T. Dr. *Tamil Novelgalil Ula Sitharippu.* Tanjore Tamil University Publication, Tanjore, 2004.
[4] Fathima Soosaimani, Dr. *Tamil Punaikathaigalil Ulaviyal*. *International Institute of Tamil Studies*, Chennai, 2007.
[5] Jayaramakrishnan, Dr. *Unarchigal Uruvakkum Udal Noigal.* New Century Book House, Chennai. 1985.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# உமா மகேஸ்வரியின் *யாரும் யாருடனும் இல்லை* நாவலில் பெண்களின் வாழ்வியல்

**முனைவர் அர. மீனா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி, சென்னை - 600040, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7094-5814
DOI: 10.5281/zenodo.14752476

**ஆய்வுச்சுருக்கம்**

*ஒரு தனிமனிதனுடைய நடத்தையின் மாற்றங்கள் அவனையும், அவன் குடும்பத்தையும், அவன் சார்ந்த சமூகத்தையும் பாதிப்பது இயல்பு. இவற்றையே இலக்கியங்கள் வெவ்வேறு வடிவில், வெவ்வேறு பொருளில் கையாளுகின்றன. சங்ககாலம் தொடங்கி இக்காலம்வரை இலக்கியங்கள் யாவும் தனிமனிதனுடைய அகத்தை வெளிக்காட்டுவதில் முனைப்புடன் ஈடுபடுகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் தமிழ் இலக்கியத்திற்குப் புதிதன்று. மரபுவழிப்பட்ட பாடல்களை, கதைகளைக் கேட்டுத் தம்வாழ்வை வளப்படுத்திக்கொண்ட தமிழினம், காலத்திற்கேற்ப தம் ரசனையை மாற்ற விரும்பிய விளைவே இன்றைய புத்திலக்கியங்கள். புத்திலக்கியங்களுள்கதைசார்ந்தஇலக்கியங்கள்தனிச்சிறப்புபெறுகின்றன. ஏனெனில், மனிதர்களின் உள்ளத்து உணர்வுகளே கதைகளாக முகிழ்த்தெழுகின்றன. மனிதர்களின் உள்ளத்தில் காணப்படுகின்ற இன்பம், துன்பம், விகாரம், அமைதி என எண்ணிலடங்காத உளவியல் சிந்தனைகள் கதைகளில் பதிவு செய்யப்படுகின்றன. மனிதர்களின் மனதைப் படிக்கின்ற ஆற்றல் எழுத்தாளர்களுக்கு உண்டு. அவ்வகையில் குறிப்பிடத்தக்க பெண் நாவலாசிரியராக அறியப்படுகின்ற உமாமகேஸ்வரியின் யாரும் யாருடனும் இல்லை என்ற நாவலில் பெண்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் நோக்கத்துடன் இவ்வாய்வு அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்:** வாழ்க்கை முறை, பெண்கள், உமா மகேஸ்வரி, யாரும் யாருடனும் இல்லை.

**முன்னுரை**

பெண்கள் தங்கள் வாழ்க்கையில் சந்திக்கின்ற சிக்கல்களுக்கு முடிவுகாண விரும்பினாலும் சமூகம் அவர்களுக்கான நியாயத்தை வழங்க மறுக்கின்றது. பெண்களே பெண்களுக்கு எதிராக அமைவதும் சிக்கல்களுக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. இவற்றைத் தாண்டி தங்கள் உடல், உள்ளம், உழைப்பு என அனைத்து நிலையிலும் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள பெண்கள் போராடிக்கொண்டுதான் இருக்கின்றனர். காலங்கள் மாறினாலும் இத்தகைய போக்குமட்டும் இன்னும் மாறவில்லை. அவ்வகையில் அறுபதுகளில் வாழ்ந்த தமிழ்ச்சமூகப் பெண்களின் மனவோட்டத்தை இந்நாவல்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



வெளிப்படுத்துகின்றது. கூட்டுக் குடும்பத்தில் சிக்கித்தவிக்கின்ற பெண்களின் வாழ்வியலை இந்நாவலின்வழி பின்வரும் தலைப்புகள் ஆராய்கின்றன.

**கதையும் தலைப்புப் பொருத்தமும்**

அன்னம்மா – பொன்னையா தம்பதியினர். அவர்களுக்கு ஏழு பிள்ளைகள். இருவர் பெண். ஐவர் ஆண். பெண்கள் இருவரும் மணமானவர்கள். ஐந்தாவது மகன் குணா திருமணமாகாதவன். தர்மராஜ் – ராஜேஸ்வரி, செல்வம் – தனமணி, நரேந்திரன் – விஜயா, நந்தகோபால் – வினோதினி ஆகியோர் முறையே மகன்களும் மருமகள்களுமாவர். இவர்களுள் ராஜேஸ்வரியும் வினோதினியும் உடன்பிறந்தவர்கள். வாணி, சுபா, லதா, அனு, பானு, வசந்தி, சரவணன், குமார் ஆகியோர் அந்த வீட்டின் குழந்தைகள். இவர்கள் அனைவரும் ஒரே வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்கின்றனர். பெற்றோர் இறந்தபிறகு இவர்களுக்குள் பூசல் முற்றுகின்றது. வீடு நிறைய உறவுகள் நிறைந்திருப்பினும் யாரும் யாருடனும் உறவாடவில்லை. அவரவர் தத்தம் உலகத்தில் ஆழ்ந்து போவதால் யாரும் யாருடனும் இல்லை என்ற தலைப்பு இந்நாவலுக்குப் பொருத்தமாக அமைகின்றது.

**பெண்களின் வாழ்வியல்**

பெண் என்றால் அமைதி, அழகு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், மென்மை, தாய்மை எனப் பற்பல அடையாளங்களை வகுத்து, அவர்களின் சுயத்தை ஏற்க மறுக்கின்ற சமுதாயத்தில்தான் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கணவன் தவறு செய்தாலும், அதைப்பொறுத்துக்கொண்டு, அதே கணவனுடன் சகிப்புத்தன்மையுடன் வாழவேண்டும் என்பதே, பெண்களின் மீது வீசப்படுகின்ற முதல் கணையாக அமைகின்றது. பொறுத்துப்போவதுதான் பெண்களின் குணம் என்றே பழக்கப்படுத்தப்பட்டது. இந்த வரைமுறை இன்றைய நவீன உலகிலும் தொடர்கின்றது என்பதுதான் உச்சக்கட்ட கொடுமை. ஆய்வுக்குரிய இந்நாவலிலும், அத்தகைய பெண் கதாபாத்திரங்களை வடிவமைத்துள்ளார் ஆசிரியர்.

**சமையலறையும் பெண்களும்**

சமையலறை ஒன்றே பெண்களின் வாழ்விடம் என்னும்படியான மனப்போக்கு இன்றும் காணப்படுகின்றது. பணிக்குச் செல்லும் நிலையில் இருக்கின்ற பெண்களுக்குச் சமையலறை விரும்பத்தகாத இடமாகவும் அமைகின்றது. அறுபதுகளின் காலகட்டத்தில் இந்நிலை இன்னும் தீவிரமாகவே காணப்பட்டுள்ளது என்பதற்கு இந்நாவல் சான்றுரைக்கின்றது. குடும்ப உறுப்பினர்களுக்குச் சமைத்துப்போடுவது ஒன்றையே தம்வாழ்வின் பெரும் கடமையெனக் கொள்ளும் மனநிலையில் இந்நாவலின் பெண்கள் காணப்படுகின்றனர். இதனை, தினசரி உயர்ந்தும் தாழ்ந்தும் எரியும் அடுப்பு நெருப்பினை மாற்றி மாற்றித் தங்கள் பொழுதுகளைப் போட்டுக் கொளுத்திக் கொண்டிருந்தனர் அந்த வீட்டின் பெண்கள் (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 67) என்று விவரிக்கின்றார் ஆசிரியர். ஆணுக்கு உலகம் என்பது விரிந்து

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



கொண்டே போகும் வட்டம். பெண்ணுக்குப் பெண் என்பது குறுகிய அடிப்படை விளக்க வட்டம் (அம்பை. ப. 108) என்ற அம்பையின் கருத்திற்கிணங்க, பெண்கள் சமையலறை என்ற வட்டத்திற்குள் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்கின்ற அவல நிலையை இந்நாவலில் காணமுடிகின்றது.

**இல்லறத்தில் சகிப்புத்தன்மை**

கூட்டுக் குடும்பத்தின் தலைவர் பொன்னையா தன் மனைவி அன்னம்மாவின் உடல்நிலை, தன் தாம்பத்திய வாழ்வில் நிறைவை ஏற்படுத்தவில்லை என்ற ஏக்கம் கொண்டு, பார்கவி என்ற பெண்ணுடன் தொடர்பு கொள்கின்றார். பாருவின் உடல் மீது நகரும் தன் விரல்கள் உண்மையில் கடிவாளப்பட்டுக் கிடப்பது அன்னம்மாவின் அடிமனதில் தான் (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 46) என்று தன் தவறுக்கு நியாயம் தேடுகின்றார். தன் கணவன் தன்னைவிட்டு வேறொரு பெண்ணுடன் முயங்குகின்றார் என்று தெரிந்தும், தெரியாதவாறு, தன் மௌனத்தால் சகித்துக் கொள்கின்றாள் அன்னம்மா.

> **பெண் குழந்தை என்றாலே அது செலவுதான் என்று சலித்துக் கொள்கின்ற கணவன் செல்வம். தனக்குப் பிறந்த குழந்தைகள் மூன்றும் பெண்ணாகவே அமைந்துவிட, தன் மனைவியை, அவள்தான் ஏதோ சதிசெய்து வெறும் பெண் குழந்தைகளைப் பெற்றுத் தருகிறாள் என்று உறுதியாக நம்பினார். (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 179)**

ஆகையால், அவளிடம் முகம் கொடுத்துப் பேசாது, பெண் குழந்தைகளிடம் அன்பும் அரவணைப்பும் இன்றி ஒதுங்கியே வாழ்கின்றார். மனைவியிடம் தன் அதிகாரத்தை விட்டுக் கொடுக்காது, தனக்குத்தானே ஒரு முகமூடி அணிந்து கொண்டு வாழ்கின்ற தன் கணவனின் அன்புக்கு ஏங்கித் தவிக்கின்றாள் தனமணி.

> **மனைவியை அதிகாரம் செய்தே வாழப்பழகியவர் தர்மராஜ். மனைவி செய்த சமையலை, குழம்பில் புளி ஜாஸ்தி, பொரியல் இன்னும் சரியா வதங்கல, என்னத்த சமைச்சிருக்க சனியன் (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 67)**

என்று தன் மனைவியை வசைபாடுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கும் தன் கணவனைப் பொறுத்துக் கொண்டு, தினமும் எந்த வகையிலாவது அவருக்குப் பிடித்தமான உணவை சமைத்துக் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கையில் சமையலறையையே தன் வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றாள் ராஜேஸ்வரி.

> **ஏராளமான செல்வங்கள் கொடுத்துத் திருமணம் செய்துகொடுத்த பின்பும்கூட, எதையாவது வாங்கிக்கொண்டு வா என்று கொடுமை செய்கின்ற தன் கணவனின் வெறியாட்டத்தைத் தாங்க முடியாமல், தாய் வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் அலைகின்றாள் பூரணி. (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 31)**

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

> **திருமணம் செய்து கொள்ளாமல் பொன்னையாவோடு வாழ்ந்து, அவர் இறந்த பிறகு, அவரைப் பார்க்க அனுமதிக்காத உறவுகளின் பார்வையில் கூனிக் குறுகுகின்றாள் பார்கவி. (*யாரும் யாருடனும் இல்லை,* ப. 272)**

இவ்வாறு, கல்வியறிவை முழுமையாகப் பெறாமல், தன் பெற்றோர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, சிறுவயதிலேயே திருமணம் செய்து கொண்டு, கணவன் எத்துணைக் கொடுமையானவனாக இருந்தாலும், அந்தக் கணவனையே தன் வாழ்க்கை என்று எண்ணிக்கொண்டு, தன் அடிப்படைத் தேவைகளுக்குக்கூட கணவனின் கையை எதிர்ப்பார்த்திருக்கும் மனைவிகளை அடையாளம் காட்டுகின்றது இந்நாவல்.

**சமூக நிலையில் பெண்கள்**

பெண்களுக்கென்று வகுக்கப்பட்ட வரைமுறைகள், சட்டதிட்டங்கள் அவர்களை பரந்த நோக்கில் சிந்திக்கவிடுவதில்லை. குடும்பத்தின் பொறுப்பு ஆண், பெண் இவருக்குமானது என்றாலும், குடும்பத்தைச் சிதையாமல் பராமரிப்பது பெண்ணின் கடமை என்றே வற்புறுத்தப் பெறுகின்றது. அவர்களும் இதுவே உண்மை என்று நம்பத்தொடங்கி அதன்போக்கிலேயே மனத்திருப்தி கொள்கின்றனர். அதன்படி, இந்நாவலில், பெண்களுக்கென்று கூறப்பட்ட கட்டுப்பாடுகளைப் பின்வரும் பட்டியல் விளக்குகின்றது.

- வெளியிடங்களில் தன் குடும்பம் குறித்து உரையாடக்கூடாது (*யாரும் யாருடனும் இல்லை,* ப. 31)
- வயதுக்கு வந்தவுடன் வெளியில் போய் விளையாடக்கூடாது (*யாரும் யாருடனும் இல்லை,* ப. 127)
- ஆண்கள் உணவு உண்ட பின்பே உணவு உண்பது (*யாரும் யாருடனும் இல்லை,* ப. 66)
- பருவம் வந்தவுடன் திருமணத்திற்குத் தயாராவது (*யாரும் யாருடனும் இல்லை,* ப. 149)
- நோட்டுக்களில் கோலம் வரைவது, எம்பிராய்டரி பூக்கள் தைப்பது (*யாரும் யாருடனும் இல்லை,* ப. 230)

எனப் பல கோணங்களில் பெண்களின் மனநிலைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலும்,

- பண்டிகை நாட்களில் குழந்தைகளை வாழ்த்தும்போது, ஆண் குழந்தைகளுக்கு 500 ரூபாய், பெண் குழந்தைகளுக்கு 100 ரூபாய்க் கொடுத்து வாழ்த்துவது. (*யாரும் யாருடனும் இல்லை,* ப. 265),
- வெளியூர் சென்று மேற்படிப்பு படிக்க ஆண் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, (*யாரும் யாருடனும் இல்லை,* ப. 254)
- பெண் குழந்தைகள் பருவம் வந்தவுடன் உள்ளூரில் உள்ள பள்ளிக்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுவது (*யாரும் யாருடனும் இல்லை,* ப.147)

என ஆண் குழந்தைகளுக்கான கற்பிதங்களைக் காணும்போது, அறுபது ஆண்டு காலத்திற்குமுன் ஆண், பெண் பேதங்களால் சமூகம் சுழற்றியடிக்கப்பட்டிருந்தமையும்,

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஆணாதிக்கம் நிறைந்த மனப்போக்கு நிறைந்தவர்களாக ஆண் சமூகம் இருந்துள்ளமையும் அறியப்படுகின்றது.

**தாழ்வு மனப்பான்மை**

சமூகத்தின் பார்வையில் மதிப்புப் பெறாதபோது, பிறர்குறை கூறும்போது இயல்பாகவே மனிதர்களின் உள்ளத்தில் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். இதனை, தன்னிடமுள்ள அல்லது இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளும் குறைகளின் காரணமாகத் தன்னைத்தானே குறைவாக மதிப்பிடும் மனப்போக்கு (தி. செயராமகிருஷ்ணன். ப. 12) என்றுரைக்கின்றனர் உளவியல் அறிஞர்கள். அதன்படி, ஆய்வுக்குரிய இந்நாவலில் தாய் தந்தையை இழந்த, கால் ஊனமுற்ற சுப்பு என்கின்ற பெண், அன்னம்மாவின் கருணையால் அக்கூட்டுக்குடும்பத்தில் ஓர் அங்கமாகின்றாள். தன்னைக் கடந்துபோகும் மனிதர்களின் கால்களையும், பாதங்களையும் கண்டு தானும் அவ்வாறு ஓடியாட முடியவில்லையே என ஏங்கிக் கொண்டே தன் உள்ளத்தில் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கிறாள்.

> **இளமையின் மினுக்கும் இறங்கி வதங்கி கால்களில் மரத்துக்கிடப்பதைப் பார்க்கும்போது தன்மேல் தீவிரமாகக் கிளர்ந்தெழும் பரிதாபத்தை ஒரு வாஞ்சையுள்ள நட்பைப்போல் வளர்க்கத் தொடங்குவாள் (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 58)**

என அவளின் கதாபாத்திரம் உரைக்கப்படுகின்றது. பிரியமும் இணக்கமும் நிறைந்தது தாம்பத்திய உறவு என்று தன் கனவிலே எண்ணியிருந்த அவளை, தோட்டக்கார வேலையாள்தன் வன்புணர்வுக்கு ஆளாக்கும்போது அவனுடைய வலிமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமுடியாத தன் இயலாமையை எண்ணி கலங்கியதைவிட,

> **நொண்டிக்கழுதைக் கென்னடி நொரநாட்டியம் என்று வன்மத்தோடு தன் உடல் மீது பரவியபோது அவள் உணர்வுகளற்ற இடமொன்றில் சிதைந்து கிடந்தாள். (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 174)**

குடும்பத்தின் பெரியவர் பொன்னையா அவளுக்கு நல்லதொரு மாப்பிள்ளை பார்த்ததாகக் கூறியவுடன் தன் நிலைமையை எடுத்துக்கூற இயலாதவளாய், இறுதியில் தற்கொலை செய்துகொள்வதாகப் படைக்கப்பட்டிருக்கின்றாள்.

**நியாயமான விருப்பங்கள் நிறைவேறாமை**

ஒரு மனிதனுக்குப் பசியும், தூக்கமும் எவ்வளவு இயல்பானதோ, அதேபோன்று உடல் தேவையும் இயல்பானதே. இது ஆண், பெண் இருவருக்கும் பொது. ஆனால், பெண்கள் தங்கள் காமத்தை வெளிப்படுத்துவது மிகப்பெரும் குற்றம் என்றே பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அவளுடைய நியாயமான விருப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. இந்நாவலில், வினோதியின் பாத்திரப்படைப்பும் அவ்வாறே அமைந்துள்ளது. பதினேழு வயதில் திருமணம் முடித்து, குடிகார கணவனுக்கு மனைவியாகின்ற வினோதினி, குடியின் போதையால் இயந்திர

கதியில் தன்னுடன் தாம்பத்திய உறவுகொள்ளும் தன் கணவனை எண்ணி மறுகுகின்றாள். பல நாட்கள் விரக தாபத்தால் தவிக்கின்றாள். வினோதியின் பெருமூச்சுக்களில் வெம்மை ஏறும்.

> **தனது அடிமனதில் நிராசையும் தனிமையும் பெருகிப்பெருகி பொறாமையாகக் கவலையோடு கவனித்தாலும் அவை அவளால் களைய இயலாதவையாக இருந்தன. (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 135)**

என்ற வரிகள் அவளின் அடிமன ஆசைகள் நிறைவேறாத ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றன. பசி, தாகம், பால் உணர்வு போன்ற அடிப்படை உந்துதல்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்புகள் அடைபடும் போது விழைவு நிறைவேறப்பெறாத மனம், தன் இழப்பின் வேதனையை மறக்க, மூலப்பொருளை ஒத்திருக்கும் ஒரு பதிலி அல்லது மாற்றுப்பொருளைப் பற்றிக்கொண்டு ஆறுதல் பெற முனைகின்றது. (பாத்திமா சூசைமணி. ப. 38) என்ற உளவியல் கருத்துப்படி, வினோதியின் மனமும் தன் விருப்பத்தை நிறைவேற்ற வேறு வழிகளில் முயன்றது. இதனால், தன் திருமணத்திற்கு முன்பே தனக்கு அறிமுகமான தன் கணவனின் தம்பி குணாவின்பால் ஈர்க்கப்பட்டு, தன் மனதில் புதைந்து கிடக்கும் ஆசைத்தீயை அவன் மூலமாக அணைக்க முயற்சிக்கிறாள். அண்ணனுக்குத் திருமணம் செய்வதற்கு முன்பே வினோதினியை நன்கு தெரிந்த குணா அவள்பால் ஈர்க்கப்பட்டு, இறந்த தன் தாயின் அன்பை அவளிடம் கண்டு, அவளின் ஆசைகளுக்குத் தானும் உடந்தையாகின்றான். இருவரும் மனமொத்த தம்பதியர் போல் தங்கள் இரவுகளை மிகுந்த மகிழ்ச்சியுடன் கழிக்கின்றனர். அவனால் கருவுற்ற வினோதினி ஊராருக்கும், தன் குடும்பத்தாருக்கும் பயந்து தன் சகோதரியின் உதவியுடன் கருவை அழிக்கின்றாள். இயல்பான தன் விருப்பம் நிறைவேறாமையால், சந்தர்ப்ப சூழல்களால் வேறுவடிவில் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்ட பெண்ணையும் ஆசிரியர் படைத்துள்ளார்.

**கற்பனையில் வாழ்தல்**

நிறைவேறாத தன் விருப்பங்களைக் கனவில், கற்பனையில் நிகழ்த்திக்கொண்டு இன்பம் அடைவது ஒருவகையான மனநிலை. இந்நாவலில் படைக்கப்பட்டிருக்கும் அனு என்ற குழந்தைக் கதாபாத்திரம் அவ்வாறே படைக்கப்பட்டுள்ளது. நினைவிலே தனக்கு மனநிறைவை தராத நிகழ்வுகளைத் தன் கனவிலும், கற்பனையிலும் காண்கின்றாள் அனு. மற்ற குழந்தைகளோடு தானும் குதிரை சவாரி செய்யவேண்டும். தண்ணீரில் விளையாட வேண்டும் என்ற தன்னுடைய சின்ன சின்ன ஆசைகளுக்கெல்லாம் தடை விதிக்கும் தாய் மீது வெறுப்பு கொள்கின்றாள்.

> **ஆயினும், அவள் மனம் கூண்டு வண்டியை விட்டு விரைந்து வெளியேறும்.... அனுவும் குதிரையும் மட்டும்தான் அங்கிருப்பார்கள். தேவதைகள் அங்குமிங்கும் உலவுவார்கள். அவர்களோடு அனு தோழமை கொள்வாள். கடவுளுக்கருகில் உட்கார்ந்து உலகத்தின் தலை விதியை நிர்ணயிப்பாள்... (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 74)**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்றவாறு தன் ஆசைகளை எல்லாம் கனவில் நிறைவேற்றிக் கொள்கின்றாள். ஆசைப்படும் நிகழ்வுகளைக் கற்பனையாக உருவமைத்துப்பார்த்து மகிழ்ச்சி அடைதல் (சீனிச்சாமி. ப. 21) என்ற கருத்தின்படி, உள்ளத்தில் அடக்கி வைக்கப்பட்ட நிறைவேறாத ஆசைகளுக்கு வடிவம் கொடுத்து மகிழ்கின்றாள் அனு.

**முடிவுரை**

அறுபது ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தின் சமூகச் சூழலை இந்நாவல் விவரிக்கின்றது. ஆணாதிக்கம் நிறைந்த உலகில் பெண்கள் தனக்கென்று விருப்பு வெறுப்பு கொண்டவர்களாகவோ, சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் உள்ளவர்களாகவோ வாழவில்லை என்பதற்கு இந்நாவல் மிகப்பெரும் சாட்சியுரைக்கின்றது. அதே வேளையில், ஆண்களின் ஆணாதிக்கப் போக்கும், அவர்களின் தனிப்பட்ட ஒழுக்கங்களும் குடும்பத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றது. பெண்களின் உலகம் ஆண்களைச் சுற்றியே சுழல்கின்றது. கணவனுடன் ஒன்றிணைந்து வாழ்வதே சமூக அங்கீகாரம் என்ற நிலையில் பெண்களின் வாழ்க்கை அமைந்துள்ளது. அதனால், தன்னைக் கொடுமைப்படுத்தும் கணவர்களிடம் இருந்து மீளமுடியாமல் சகிப்புத் தன்மையுடன் வாழப்பழகிக் கொண்டவர்களாகக் காட்சியளிக்கின்றனர். குடும்பப் பராமரிப்பு என்பது பெண்ணின் தனிக்கடமை என்ற எண்ணம் பெண்ணின் நனவிலியில் ஆழமாகப் பதிக்கப்பட்டுள்ளது. சமைப்பதும், கோலமிடுவதும், எம்பிராய்டரி வேலைகள் பார்ப்பது மட்டுமே அவர்களின் பொழுதுபோக்குகளாக அமைகின்றன. வயதுக்கு வந்தவுடன் அவர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டு, கல்வி மறுக்கப்பட்டு, வீட்டு வேலைகளைப் பழக்கிக் கொள்வதுதான் சிறந்த பெண்ணிற்கு அழகு என்ற தவறான கற்பித்தல் பெண்கள் உழல்கின்றனர். ஆண்கள் தங்களை உயர்வானவர்களாகக் கருதுவதும், பெண்கள் ஆண்களுக்கு அடிபணிந்தே வாழப்பிறந்தவர்கள் என்பதும் எழுதப்படாத விதியாக அமைகின்றது. தங்கள் விருப்பங்கள் நிறைவேறாத நிலையில் தாழ்வு மனப்பான்மை கொள்கின்றனர். வாழ முடியாது என்ற நிலையில் தற்கொலை செய்து கொள்கின்றனர். தனக்குப் பிடித்தவாறு கற்பனையில் வாழ்கின்றனர்.

**குறிப்புகள்**

[1] அம்பை. *உடலெனும் வெளி – பெண்ணும் மொழியும் வெளிப்பாடும்.* கிழக்குப் பதிப்பகம், சென்னை, 2017.

[2] உமாமகேஸ்வரி. *யாரும் யாருடனும் இல்லை.* தமிழினி பதிப்பகம், சென்னை, 2003.

[3] சீனிச்சாமி, து, முனைவர். *தமிழ் நாவல்களில் உளச்சித்தரிப்பு.* தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர். 2004.

[4] பாத்திமாசூசைமணி, முனைவர். *தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்.* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.

[5] ஜெயராமகிருஷ்ணன், தி, டாக்டர். *உணர்ச்சிகள் உருவாக்கும் உடல் நோய்கள்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1985.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.